ஸ்ரீ

# அங்கதன்

(மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடிய
நற்போதனைகளைக் கொண்டதோ ரினிய சரித்திரம்.)

கோமளேசுவரன்பேட்டை
வித்வான்
ஸ்ரீமான் ம. இராஜகோபால பிள்ளை
அவர்கள் எழுதியது.

சென்னை :
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
மணிசாமி முதலியாரவர்களால்
வெளியிடப்பெற்றது.

1924.

[விலை அணா 4.

* இக்குறியுள்ளவை துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பெற்றவை.

## மாணவர்க்குரிய புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| * சதானந்தர் | ரூ. ... | 1 | 4 |
| * ஜீவகன் | ... | 1 | 0 |
| * கர்ணன் சரிதை | ... | 0 | 12 |
| * ஸ்ரீ பீஷ்மவிஜயம் | ... | 0 | 10 |
| * வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் | ... | 0 | 10 |
| * கீர்த்திசிங்கன் | ... | 0 | 8 |
| * அரிச்சந்திரன் சரிதை | ... | 0 | 8 |
| * சகோதரவாஞ்சை | ... | 0 | 7 |
| * நீலக்கொடி | ... | 0 | 5 |
| * மணவாளன் | ... | 0 | 3 |
| * பரசுராமன் | ... | 0 | 3 |
| ஸ்ரீ கிருஷ்ணன் தூது | ... | 0 | 8 |
| தசாவதார மகிமை | ... | 0 | 6 |
| சண்டோபாக்கியானம் | ... | 0 | 6 |
| சிசுபாலன் | ... | 0 | 8 |

ஆனந்தபோதினி ஆபீஸ்,
மதராஸ்.

ஸ்ரீ

# முகவுரை.

---

வேதார்த்தங்களை விளக்கவல்ல இராமாயண பாரதங்களாகிற இதிகாசங்களே, மக்களுக்கு நல்லறிவை யூட்டி, உலக தருமங்களை யொழுங்குபெற அனுஷ்டிக்கும் நெறியில் அவர்களைப் புகுத்தவல்லவை என்பது ஆன்றோர் துணிபு. அவ்விதிகாசங்களிற் றலைமை வாய்ந்த இராமாயணத்தில் வரும் அங்கதன் சரித்திரம்,

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

என்னும் திருக்குறளின் கருத்தையும் பயனையும் வெளிப்படுத்தி, மாணவர்களை நல்வழியிற் செலுத்தி, தத்தமது குலத்தின் மேம்பாட்டிற்கும், உலகத்தின் முன்னேற்றத்திற்கும் அவர்களை உரியவராக்கும் நற்போதனைகளைக் கொண்டிருக்கின்றது என்பதும் கரதலா மலகம்போல் யாவரும் அறிந்ததே. ஆனால் அச்சரிதம் தனியே ஒரு சிறு புத்தகரூபமாக, இனிமையும் எளிமையும் பொருந்திய நடையில் எழுதப்பெற்று வெளிவரின் பலர்க்கும் உபகாரமாயிருக்குமென்று, ஆனந்தபோதினி புரொப்ரைட்டர் ஸ்ரீமான் நா. முனிசாமி முதலியாரவர்கள் விருப்பங்கொண்டு அதனை எழுதும்படி என்னைக்கேட்டுக்கொண்டனர். அடியேனுக்கு அத்திறமை யில்லாகிருந்தும், 'ஆசை வெட்கமறியாது' என்னும் பழமொழிக் கிணங்கி, ஒருவாறு எழுதி முடித்தனன். பிழையிருப்பின் உலகம் பொறுத்தருளுமாறு எல்லாம் வல்ல இறைவன் கிருபை புரிவாராக.

ம. இராஜகோபால பிள்ளை,
கோமளேசுவரன் பேட்டை.

ஸ்ரீ

# அங்கதன்.

காப்பு.

கொங்கவிழ் வதுளக் குணநிதி யடிபணிந்
தங்கதன் சரிதை யறைந்திடு வாமரோ.

பயன்.

துங்க வாயுள் மனைமக்கள் சோதரர்
சுற்ற நீர்நிலஞ் சுந்தர வான்குலம்
பொங்கு மன்பருள் போற்றற மாண்மைமெய்ப்
போதஞ் செல்வம் புகழ்த்தெய்வ நம்பகந்
தங்கும் வாழ்விற் றழைத்திங்கு வாழலாந்
தன்னிகர் முத்தி தன்னையுஞ் சாரலாம்
அங்கதன்றன் சரித்திர மொன்றினை
யாளும் பாக்கியம் வாய்க்கப் பெற்றாலரோ.

---

நூல்.

## 1-வது அத்தியாயம்

### அங்கதன் உற்பத்தி.

செல்வநாயகிக் குவப்பான மைசூர் இராச்சியத்திற்கு வடபாரிசத்தில் கிஷ்கிந்தையென்னும் மலைப் பிரதேசம் ஒன்றுண்டு. இதனைப் பலவழியிலும் அழகுபடுத்தி நிற்பது பம்பாநதி.

அதனால் இக்கிஷ்கிந்தாபுரி "ஆறில்லா வூருக்கழகு பாழ்" என்னுங் குறைபாடின்றி விளங்கலாயிற்று. நீரே பிராணுதார மாதலின், இப்புண்ணிய நதி, தன்னில் முழுகப் பெற்றவரைப் பாபரகிதராக்கி, அவர்கள் கோரும் இஷ்டகாமியங்களை யளிப்பதுடன், "துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய்", கிஷ்கிந்தையை "நாடாவளத்தது" என்று எல்லோராலும் கொண்டாடும்படி செய்யாநின்றது. இவ்வண்ணம் இந்நதி, இப்புரியின்கண் "ஓதிய உடம்புதோறும் உயிரென" உலாவி வந்தது.

இப்புனித வாற்றின் உதவியால் கிஷ்கிந்தாபுரி, எங்கும் பச்சைப் பசேலென்று பசுமை நிறம் வாய்ந்து, பரந்தாமனைப் போலுங் கண்குளிரத்தக்க காட்சியைத் தந்துகொண் டிருந்தது. இப்புரியின் பெருமை சொற்சுடங்காதது. பொன்னாட்டுப் புலவர்களே வானரவடிவினராய் வந்து வசிப்பதற்கு இவ் வுன்னத தலத்தைத் தெரிந்தெடுத்தமையால், இதன் தூய தன்மையை யாவரே அளவுகண்டு புகழக்கூடும்? இருவகைத்தான தவத்தையும் பொருளையும் ஈட்ட முயல்வார்க்கு ஏற்ற இடம் இதுவே.

"மணிநீரும் மண்ணும் மலையு மணிநிழற்
காடும் உடைய தரண்"

என்கிறபடி இயற்கையுஞ் செயற்கையு மாகிய நால் வகை யரண்களையுங் கொண்ட இத்தெய்வப் பதியை வாலி என்னும் வானர ராஜனொருவன் அரசுபுரிந்து வந்தான். வாலிக்கு சுக்கிரீவனென்னும் பெயரை யுடைய தம்பி யொருவனுண்டு. வாலி தர்ம சாஸ்

திரங்களையும், வேத வேதாந்தங்களையும் நன்குணர்ந்தவன். சிவபிரானிடம் மனப்பூர்வமான பக்தி பூண்டவன். பிரதிதினமும் சப்த சாகரங்களிலும் நீராடி, விதிவழுவாது சிவபூஜை செய்தபிறகே மற்ற காரியங்களைக் கவனிப்பான். ஒரு சமயம், இவனுடைய நிலையான பக்திக்கு மெத்தவுங்களித்த சிவபெருமான் இவன் முன் தோன்றினார். அப்போது இவன் அப்பெருமானை நோக்கி, திரிகரண சுத்தியோடும் தெண்டனிட்டுப் பணிந்து, "பரப்பிரம்ம சொரூபராயும், தேஜோன்மயராயும், சிருஷ்டி, திதி, சம்மாரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்திய கர்த்தராயும், சோம சூர்யாக்கினியாகிற திரிநேத்திரங்களை யுடையவராயும், ஆதிமத்திய பாதாள மென்னும் முப்புவன சம்ரக்ஷகராயும், உமாதேவியார் தங்கப்பெற்ற வாமபாகராயும், ஆலால கண்டராயும் சந்திர சூடராயும், கங்காதரராயும், ரிஷப வாகனராயும், புராந்தகராயும், நிலவை யுருக்கி வழியவார்த்ததுபோலுந் திருநீற்றைத் தேகமுற்றும் அணிந்தவராயும், மழுமானேந்திய பாணியராயும், சர்ப்ப பூஷணராயும், ஜடாதாரராயும், அநாதரக்ஷகராயும், ஆபத்சகாயராயும், அடியார்க் கெளியவராயும் உள்ள ஓ! தேவதேவரே! உமக்கு வந்தனம். ஓ! காலகாலரே! உமக்கு வந்தனம். சிற்றறிவுஞ் சின்னாளும், தொல்வினையும் பல் பிணியுங்கொண்ட அடியேனையும் பொருட்படுத்தி யாட்கொள்ள வந்த ஆதிமூர்த்தியே உமக்கு வந்தனம். தேவரீரது பெறலருஞ் சேவையால் நாயேன் உய்ந்தனன்" என்று பலவாறு சொல்லி மீண்டும் அஷ்டாங்கமும் தரையிற் பொருந்த வீழ்ந்து வணங்கி எழுந்து நின்றான்.

சிவபிரான் திருவுள்ளமுவந்து அவனைக் கடா க்ஷித்தருளி, "அன்ப! நினக்கு ஏதேனும் வர மொன்று கொடுத்துப்போக மனதானேன். வேண் டியதைக்கேள்" என்றனர். வாலி "ஆண்டவனே! அடியேனுடன் போர்புரிய வந்தெதிர்ப்பவர் எவரா யிருந்தாலும் அவருடைய பலத்தில் பாதி என்னை யடையுமாறு வரந்தந்தருள்வீர்" என்று வேண்டிக் கொண்டனன். அவ்வண்ணமே வரமருளி, மாதொரு பாகர் அந்தர்த்தான மாயினர். வாலியுஞ் சந்தோஷ சித்தனாய்த் தனதில்லஞ் சேர்ந்தனன்.

வாலிக்குத் தாரையென்றொரு மனையாளுண்டு. அவள் நற்குண நற்செயல் உடையவள். இல்லற ஒழுங்கை இனிதறிந்தவள். பதிபக்தியை மேற் கொண்டவள்.

"எப்பணியால் இன்புறுவர் காதலரக் காதலரை
அப்பணியால் அப்பொழுதே அன்புறுத்தி-ஒப்ப
மனங்குழையும் வண்ணம் மகிழ்விப்ப தன்றோ
கனங்குழையார் தங்கள் கடன்"

என்னும் விதிக்குக் கட்டுப் பட்டவள். நாயகன் ஜெபதபாதி பூசைகளில் அமர்ந்திருக்கும்போது, இப்பெண்ணரசி அவனைக் குருவாகப் பாவித்துத் தான் வேண்டிய சிஷ்யத்துவஞ் செய்து வருவாள்; இல்லற இன்பநுகருங் காலத்தில் இரதிதேவிபோலு மிருந்து அவனுக்கு வேண்டிய பணிவிடையால் திருப்தி யுண்டாக்குவாள்; மற்ற வேளைகளில் அவனைத் தெய்வமாகக் கருதி அவன் சொற் கட வாது நடந்து வருவாள். உத்தமியாதலின் இவள் பஞ்சகன்னியருள் ஒருத்தியாக எண்ண நின்றாள்.

பெண்மக்கள் இல்லக்கிழத்திய ரானதும் புத்திர வாஞ்சை கொள்வது இயல்பு. தாரைக்கும் இவ் விருப்பம் நெடுநாளாக வுண்டு. இவ்விஷயமாகத் தான் விரத முதலிய சற்கருமங்களை அனுஷ்டித்து வரத் தன் கணவனுடைய அனுமதிபெற வேண்டு மென்று தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தாள். ஒருநாள் தன் புருஷன் தன்னிடம் உல்லாசமாகப் பேசிக்கொண் டிருந்தபோது இவ்வனிதாரத்னம் "நாதா! நமக்குக் கைலாசபதியின் திருவருளால் எல்லாப் பாக்கியமும் கைகூடியிருந்தும், நமக்குப் பின் நமது பேரையும் குலத்தையும் விளக்கப் புத்திர பாக்கியம் ஒன்று மட்டுங் குறைவா யிருக்கின்றது. வாழையடி வாழையாய் நமது குலம் விருத்தியடைய வேண்டாவா? சந்தான விருத்திக்குத் துணையா யிருத்தலினாலன்றோ பெண்மணிகளை 'ஆயிரங்காலத்துப் பயிர்' என்று பெரியோர் கூறுகின்றனர். தாங்களிதனைத் தெரிந்திருந்தும் இது பற்றிய கவலை யில்லாதவரா யிருப்பது அழகாகத் தோன்ற வில்லையே. மக்களின் பொருட்டு உலகிலுள்ளோர் நோன்பு நோற்பதும், தானதருமங்கள் புரிவதும், புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவதற்கும் புனித ஸ்தலங்களைச் சேவிப்பதற்கும் யாத்திரை செய்வதும், இவை போன்ற உத்தமகிரியைகளில் ஈடுபடுவதுமா யிருக்கிறார்கள். மேலும் மக்களில்லாத வீடு மயானத்திற்குச் சமானமான தென்றுஞ் சொல்லுகிறார்கள். அல்லாமலும் தாமரையற்ற தடாகமும், சந்திரனற்ற அந்திவானமும், எவ்வாறு சிறப்படைவதில்லையோ அவ்வாறு குழந்தைகளில்லாத வீடும் சிறப்பதில்லை.

"புத்தென்னும் நரகினின்றுங் கரையேற்றுபவர் மக்களே யல்லவா? தென் புலத்தார் கடனும் அன்னவராலன்றோ செலுத்தற் பாலது. நமக்குப் பல மக்கள் பிறத்தலினும் அறிவறிந்த மகவு ஒன்றிருந்தாற் போதும். இந்த அறிவறிந்த மகப்பேறே நாம் பெறத்தக்க சம்பத்து பலவற்றினும் மேம்பாடுடையது. அத்தகைய மகவால் நமது பழவினைத் துன்பங்கள் நசிந்து பரமானந்த பலன் சித்திக்கும். தாங்களறியாத விஷயமா இது? பெண்களுக்குப் பிள்ளைகளைப் பெற்றெடுத்து வளர்ப்பதில் ஆசை அதிகமாதலின் அடியாள்இவ்வளவு தூரம் பேச வேண்டியதாயிற்று. இதுபற்றிய கவலை இனித் தங்களுடையதே" என்றாள்.

இவ்வசனங்களைச் செவியேற்ற வானரேசன் தன் வாழ்க்கைத் துணையான தாரையைப் பார்த்து "அரசி! நீ நன்றே புகன்றாய். இன்று முதல் நீ விரதசீலியா யிருந்து ஜகன் மாதாவான உமா மகேச்வரியை ஆராதித்து வரக்கடவாய். நானும் பரமேச்வரனைக் குறித்துப் புத்திரோற்பத்தியி னிமித்தம் அருந்தவம் புரிந்து வருவேன்" என்று சொல்ல, இருவரும் அவ்வாறே தவமாற்றி வந்தனர். கருணாநிதியான சிவபெருமான் ரிஷபவாகனரூடராய் உமாசகிதம், அவர்களருந்தவத்துக் கிரங்கி, காட்சி தந்தருளினார்.

வாலியுந் தாரையும் பார்வதி கொழுநரைத் தெண்டனிட்டுப் பணிந்து, வாயார வாழ்த்தி, மனதாரச் சிந்தித்து, அடியோங்கள் கொண்டுள்ள அபீஷ்டத்தைத் தலைக்கட்டி எங்களை ஆதரித்தருளவேண்

டும். ஏ! ஜெகதீசா! தேவதேவா! கிருபா சமுத்திரா! சம்போ! சங்கரா! என்று துதித்தனர். ஆலமர் கடவுளும் அத்தம்பதியரை நோக்கி "உங்களருந்தவத்தை மெச்சினேம். விரைவில் நீங்கள் ஒரு சற்புத்திரனை யடைவீர்கள். அவன் இலக்ஷ்மீ பதியாகிய ஸ்ரீமந்நாராயண மூர்த்திக்கு அத்யந்த பக்தனாய், சர்வ நலங்களோடுங் கூடி யிருந்து, உங்களுக்கு சிரேயசை யுண்டு பண்ணுவான். அவனால் நீங்கள் நற்கதிக் காளாவீர்கள். உங்கள் குலமும் மேன்மை யடையும். உலகமும் க்ஷேமமுறும்," என்று ஆசீர்வதித்து மறைந்தருளினர்.

காமதகனர் அருளியவாறே, தாரை, கர்ப்பவதியாய்த் திங்கள் பத்தும் கழிந்தபின் ஒரு சுதினத்தில், நற்கிரகங்கள் கூடிய சுபமுகூர்த்தத்தில் ஒரு புத்திரனைப் பெற்றெடுத்தாள். அப்போது தேவர் பூமாரி பெய்து வாழ்த்தினர்கள். மர்க்கடாதிபதியான வாலி இம்மங்கள மொழியைக்கேட்டதும் ஆனந்தவாரியிலாழ்ந்தனன். தானங்கள் பலவும் வழங்கினன். நகரத்தைப் பலவகைத்தோரணங்களால் அலங்கரித்து ஜனனோற்சவத்தை மிக்க விமரிசையாகக் கொண்டாடும்படி திட்டஞ்செய்தனன். தக்கவர்களைக்கொண்டு ஜாதகங்கணிக்க வைத்தனன். மந்திரத்தலைவர் முதலிய பெரியோரைக் கொண்டு நாமகரணஞ் சூட்ட நியமித்தனன். குழந்தை பிறந்த நக்ஷத்திரத்திற்குப் பொருந்துமாறு "அங்கதன்" என்று அன்னோர் பெயரிட்டனர்.

அப்போது, நகரமாந்தரும், சேனைவீரரும், பந்துவர்க்கத்தாரும் அடைந்த சந்தோஷத்திற்கு

எல்லையில்லை. எண்ணெய் சுண்ணம் எதிரெதிர்த் தூவியும், கூடியும், ஓடியும், ஆடியும், பாடியும், விழுந்தும், எழுந்தும், குதித்தும், துதித்தும் ஜனங் கள் தங்கள் இன்பப்பெருக்கை வெளியிட்டனர்; பெறலரும் பிள்ளையை எடுப்பதும், பாதாதி கேச அழகைப் புகழ்வதுமாயினர். முத்தமிட்டுக் கொஞ் சினர். தாய்தந்தையர், ஆணிப்பொன்னாலும் மணி யினங்களாலும் செய்யப்பெற்ற மனோகரமான தொட்டிலில், பிள்ளையைக் கிடத்தி,

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ.

பாரோர் புகழ்ந்தேத்தும் பாக்கியமாய் யாஞ் செய்த
சீரார் தவத்துதித்த செல்வமே கண்வளராய் (ஆரா)
சங்கதனை யேந்துந் தயாநிதியன் பிற்குகந்த
அங்கதா ஆரமுதே அற்புதமே கண்வளராய் (ஆரா)
சங்கரனார் தண்ணருளால் தாரணியில் வந்துதித்த
சிங்கமே எங்களருஞ் சேவகமே கண்வளராய் (ஆரா)

என்று தாலாட்டினார்கள். சிறிது நாட்கள் சென்ற தும் சந்திரனைக் காட்டித் தநயனை மகிழ்வித்தார்கள். பின்னர்ச் செங்கீரை யாடவைத்தனர். அதாவது பாலகனை அசைத்தாட்டினர்; சப்பாணிகொட்டச் செய்தனர்; இவை போன்ற பால விளையாடல்கள் கழிந்து ஐந்து வயதானதும் வித்தியாரம்பத்திற் பழக்கிச் சகல கலைகளையும் ஓதுவித்தனர். அங்கதன், உத்தம மைந்தனாதலின், இராஜநீதிகளிற்றேர்ந்து, தெய்வவிசுவாசந்தழைத்து, அன்பு, அருள், ஈகை, பரோபகாரம், வீரத்துவம், தீரத்துவம் முதலிய நற் குணங்களிற் சிறந்து, யாவரும் புகழும்படி விளங்கி வந்தான்.

## 2-வது அத்தியாயம்.

### அங்கதன் இளவரசா யிருத்தல்.

இவ்வாறு அங்கதன் தலையெடுத்துவரும் நாளில், வானர பூபதியான வாலியிடம் துந்துபி என்னும் அசுரனொருவன் போர்புரிய வந்தான். துந்துபி அரிய தவம்புரிந்து பெரிய வரங்கள் பெற்று, அகங்கார மேலிட்டுத் தனக்கு ஒத்தாரு மிக்காருமில்லையென இறுமாந்து, எந்தத் தேவனால் இவன் இந்த நிலையை யடைந்தானோ அந்தத் தேவனாகிய பிரமதேவனிடம் சென்று "ஐயா! நான் பெற்றுள்ள பராக்கிரமத்தைச் சோதித்தறிய விரும்புகிறேன். ஆகலின் நீரே என்னுடன் போருக்கு வரவேண்டு" மென்று அழைத்தனன்;

சதுரானனர் "இவன் நம்மிடம் வரம் பெற்று நம்மையே பரீட்சிக்க வந்திருக்கிறான். நாம் கொடுத்த வரத்தை நாமே அழிப்பது தருமமன்று. இவனை நம்மிடத்திருந்தும் அகற்றவேண்டும் என்று. நினைத்து, அவனை நோக்கி "நான் உன் வல்லமைக்குரியவனல்லேன்; மது கைடவர் முதலிய வீராதி வீரர்களை வென்ற விஷ்ணுமூர்த்தி யிருக்கிறார்; அவர்பாற் செல்வாயாக" என்று சொல்லி அவனை யனுப்பி விட்டார்.

துந்துபி அவ்வண்ணமே திருப்பாற் கடலில், சேஷசயனத்தில், அறிதுயி லமர்ந்துள்ள திருநாதனிடம் வந்தான். அவர் அவனை நீலகண்டராகிய சிவபிரானிடம் போகும்படி அனுப்பினர். "நல்லது" என்று அவன் கண்ணுதற் கடவுளிடம் வந்தான்.

அப்பெருமான், அவனை விளித்து, "அப்பா! நாங்கள் உன் வலிக்கு ஈடாகமாட்டோம். நீ தேவர்கள் பாலடைந்தால் உன் பெருமை சிறிது வெளிப்படும். அதுவும் அவ்வளவு சிறப்பை உனக்களிக்காது. உன் தினவு முற்றும் அடங்கவேண்டி, நீ அனேக நாள் போரிடக் கருதினால், பூலோகத்தில் கிஷ்கிந்தை யென்றொரு நகரமுண்டு. அந்நகரில் குரக்கினத் தலைவனாய், வாலி என்னும் பெயருடன் அபாரசக்தியைப் படைத்த ஆண்டகை யொருவனிருக்கிறான். அவனிடம் போ. அவனே உன்னுடன் நேர் நின்று போர்புரிவதற்கு யோக்கியமானவன். அதனால் உனக்குஞ் சிலாக்கியமுண்டு. வேறு யோசியாதே" என்று புகன்று அவனைக் கிஷ்கிந்தைக்கனுப்பினார்.

சிவபிரான் ஆக்கியாபித்தவாறே, துந்துபி, பார்க்கப் பயங்கரமாயும், தென்றிசைக் கடவுளின் ஊர்தியாயுமுள்ள மகிஷ ரூபியாய், கிஷ்கிந்தையை நாடிவந்தான். வந்தவன், "மணலின் முழுகி மறைந்து கிடக்கும் நுணலுந்தன் வாயாற் கெடும்" என்பதை மறந்து, உரத்த குரலெடுத்து, "இங்கு வாலி யென்னும் பெயரினன் எவனோ ஒருவன் இருக்கின்றானமே? யாரடா அவன்? சீக்கிரம் வெளியே வரட்டும்" என்று கூவினான். அப்போது வாலி தன் மாளிகையின் உட்புறத்தில் ஏதோ காரியார்த்தமாயிருந்தான். துந்துபியின் கூக்குரலைக் கேட்டதும் "ஐயோ! பாபம்! எவனோ இங்கு ஆழமறியாது காலிட்டுக்கொண்டான். அவனுக்கு நமது சொரூபத்தைக் காட்டவேண்டியது நியாயமே" என்று

தனக்குள் சிந்தித்து, "யாரப்பா என்னை அழைப்பவன்? சற்று நிதானி. ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்றும், பதறுத காரியம் சிதறு என்றும் வழங்கும் பழமொழிகளைக் கவனி. எப்போது நீ சந்துவிட்டாயோ அப்போதே வந்துவிட்டேன்" என்று உள்ளிருந்தபடியே விடை யளித்து, தன் வேலையை விரைவில் முடித்துக்கொண்டு, வெளியே வந்தான்.

வந்ததும், ஆகாயத்தை முட்டத்தக்க பர்வதாகாரமான எருமைக்கடா ஒன்று, யுத்தத்துக்குரிய கோலத்துடன், செவ்வானம் போலும் சிவந்த விழிகளைக் கொண்டு, நின்று கொண்டிருப்பதைக் கண்ணுற்றான். உடனே அண்டங்கள் நடுங்கும்படி ஒரு சிரிப்பு சிரித்தான். அரவினிடஞ் சிக்கிய எலியெனப் பாவித்து அத்துந்துபியுடன் கைகலந்தான். இருவருக்கும் பெரிய யுத்தம் மூண்டுகொண்டது. விழுவதும், எழுவதும், குத்துவதும், மொத்துவதுமாய், தோற்பு கெலிப்பு தெரியாதபடி வெகுநேரம் சண்டை யிட்டனர். முடிவில் துந்துபி, வாலியின் வல்லமைக்கு ஆற்றுதவனாய்த் தோல்வியுற்றுப் பிலத்துவாரமொன்றில் நுழைந்தோடினன். வாலியும் அவனை விடாது தொடர்ந்தான். தொடர்ந்தவன் நெடுநாள் திரும்பி வரவில்லை. ஆனால் இரத்தப் பிரவாக மாத்திரம் பெருகி, வெளியேறி, ஒரு பேராறு போல் ஓடத் தொடங்கிற்று.

இது கண்ட வானர வீரர்களனைவரும் வாலிக்கே ஆபத்து நேர்ந்துவிட்டதெனக் கருதி, பீதியடைந்து, இனி அத்துந்துபி நகர்க்குள் வந்தால் என்ன கெடுதி

நேரிடுமோ வென்று மனநடுக்கங்கொண்டு அப் பிலத் துவாரத்தை யொரு பாறையால் மூடிவிட்டனர். பிறகு கிஷ்கிந்தாபுரியிலுள்ள குடிகளும் பெரியோரும் ஒன்றுகூடி யோசித்து, வாலியின் உடன்பிறந்தானாகிய சுக்கிரீவனைத் தங்களுக்கு அரசனா யிருக்கப் பலவந்தப்படுத்திச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்தனர்.

பிலத்தில் நுழைந்த வாலி, துந்துபியைக் கொன்று, அவனது பெருத்த சரீரத்தை வெளியேற வெறிந்து, திரும்பினன். பிலத் துவாரம் அடைபட்டிருப்பதைக் கண்ணுற்று "இது தன் தம்பியின் வஞ்சகம்" என்று நினைத்து, அடங்காக் கோபமடைந்து, வாலி, சுக்கிரீவனைக் கொல்லத் துணிந்தான். சுக்கிரீவன் "அண்ணா! நானொன்றும் அறியேன். நமது நாட்டார் அனைவரும் ஒருமித்துச் செய்த வேலை யிது. தங்கள் அரசைத் தாங்களே ஏற்றுக் கொள்ளலாம்" என்று பல சொல்லி மன்னிப்புக் கேட்டும், வாலி இரக்கங் கொள்ளாதவனாய்க் கொல்லுவதே சரி யென்று சுக்கிரீவனை வருத்தலானான். சுக்கிரீவனும் இனி அண்ணன் தன்னை யாதரியானென்றுணர்ந்து அவன் வரக்கூடாத இடமாகிய மதங்க மலையில் தங்கியிருந்தான். அவனுக்கு உதவியாய் அமைச்சரான மாருதியும் அவனுடன் தங்கியிருந்தார்.

அப்போது, சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டு அவ்வழியே இராம லக்ஷ்மணர் இருவரும் வந்தனர். இவர்களை ஆதவன் மைந்தன் கண்ணுற்றான். உடனே ஆஞ்சநேயரை நோக்கி, சுக்கிரீவன்,

"அன்ப! இதோ நமது எதிரே வரும் இவர்கள் யாரா யிருக்கலாம். சுத்த வீரர்களாகக் காணப்படு கின்றனர். ஒரு வேளை எனது அண்ணனால் என்னைக் கொல்ல அனுப்பப்பட்டவர்களா யிருக்கலாமென்று என் புத்தியிற் படுகிறது. இனி நாம் இம்மலையி லெங் கேனும் இவர்கள் கண்ணுக்ககப்படாமல் மறைந்து கொண்டாலன்றிப் பிழைப்பதரிது. வா சீக்கிரம்" என்றான்.

வாயு குமாரர், மகாராஜாவைப் பார்த்து "ஐய! நீர் எண்ணுகிறபடி இவர்கள் கெடுதிசெய்ய வந்தவர்க ளாக எனக்குப் புலப்படவில்லை. குணவந்த ரென் பதை இவர்கள் முகக்குறி வெளிப்படுத்துகிறது. நீரஞ்சவேண்டாம். இவர்களிடம் நானே நேரில் சென்று சகல வரலாறுந் தெரிந்துகொண்டு வருகி றேன். ஆனால் சிறிது கவலை கொண்டுள்ளவர்களாக வும் தென்படுகின்றனர். அரிய பொருளொதையோ ஒன்றை இழந்து அதை மீண்டும் அடையவேண்டு மென்கிற நோக்கத்தை மேற்கொண் டிருப்பதாய் இவர்களின் தோற்றம் வெளியிடுகின்றது" என்று சொல்லி, பிராமண பிரமசாரியாக வுருவெடுத்துக் கொண்டு, இராம லக்ஷ்மணரிடஞ் சென்றார்.

மாருதியைக்கண்ட தாசரதி, அவரைப்பூரண பாண்டித்திய முடையவரென்று அவருடைய முகக் குறியால் நன்குணர்ந்து இலக்ஷ்மணரிடம் அதைப் பற்றி விஸ்தரித்துப் பேசினார். பிறகு சீதாபதி, ஆஞ்நேயர் மூலமாக வாலி சுக்ரீவரின் வரலாறு முற் றுந்தெரிந்துகொண்டார். தமது வரலாற்றையும் அவருக்கறிவித்தார். சுக்ரீவனது நட்பை அங்கீகரித் துக்கொண்டார். வாலியைச் சங்கரித்து, சுக்ரீவனைக்

காப்பதாய் வாக்களித்தார். எல்லா நியாயங்களையுந் தெரிந்துள்ள வாலி சகோதர வஞ்சத்தைக்கடைப் பிடித்தது தவறல்லவா? சுக்ரீவன் தன்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டும், அவன் வேண்டுகோளுக்கு மனமிரங்காதது, தெய்வபக்தியும் பேராற்றலும் படைத்து, சாஸ்த்ரோக்தமான நீதிகளும் நன்கறிந்த ஒருவனுக்கு அழகாகுமா? “மனுவின் நெறிபுக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே” என்னும் ஞாயத்திற்கு யோக்கியம் வாய்ந்த வாலி தன் தம்பியை அநீதமாகக் கொல்லத்துணிந்ததோடு அவனுடைய தாரத்தையுங் கைப்பற்றிக் கொண்டது பொறுத்தற் கரியதோர் பிழையே. ஆகையால் ஸ்ரீ ராமபிரான் அவ்வாலி கொண்டுள்ள வரத்துக்குப் பழுது நேராதபடி, கள்ளனை மறைந்திருந்து பிடிக்க வேண்டுமென்கிற அரசநீதியைத் தழுவி அவனை வதைத்தருளினர். அவனும் ஸ்ரீ ராமபிரான் செய்தது ஒழுங்கே என்பதை முடிவிலுணர்ந்து, “வெற்றர செய்தி யெம்பி வீட்டரசெனக்கு விட்டான்” என்று மகிழ்ந்தான்.

மரணத்தறுவாயிலிருந்த வாலி, தன் பின்னவனாகிய சுக்ரீவனையும் மகனாகிய அங்கதனையும் அழைத்து, அவர்கள் ஸ்ரீ ராமபிரானிடம் நடந்து கொள்ள வேண்டிய தன்மைகளையும், குடிகளிடம் அனுசரிக்கவேண்டிய தருமங்களையும் வற்புறுத்திப் போதித்து, அவர்களுடைய கரங்களைப்பற்றி இரவி குலோத்தமனிடம் ஒப்புவித்து, “தயாநிதியே! இவர்கள் இளைஞர்கள். எவரெவர் திறத்து எவ்வெவ் வண்ணம் ஒழுகவேண்டுமோ அம்முறைகளைத் திருத்தமாக அறியார்கள். இவர்கள் செய்யுங்குற்றங்

குறைகளைக் குணமாகக்கொண்டு காத்தருள்வது உமது பாரம். எவ்வித காரணத்தை முன்னிட்டும் இவர்கள் மீது, அடியேன் மேற்கொண்ட கோபத்தைச் செலுத்தாதிருக்கப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன். இதோ நிற்கும் அநுமந்தனை உமது கைத்தனுவென்று நினைத்தல் வேண்டும். இவனுல் ஆகாத காரியம் ஒன்றுமே இல்லை. இனி, தேவரீர் ஆதி மூர்த்தி என்பதை அறிந்தேன். பக்தவத்சலா!

"மாவலச் சூலியார் வாழ்த்து நர்க் குயர்வரம்
ஓவலற் றுதவனின் ஒருதனிப் பெயரியம்
பாவலிப் புடைமையா லாகுமப் பொருளையாம்
தேவநிற் கண்ட வெற் கரிதெனோ தேரினே"

என்று கைகூப்பி, வாயார வாழ்த்தி, அந்தமி லின்பத்தழிவில் வீடாகிய பரமபத மடைந்தான்.

ஸ்ரீ ராமபிரான், அவனுடைய அரும்பெறற் புதல்வனுகிய அங்கதனை அன்புடன் விளித்து, அருகே நிறுத்தி "குழந்தாய் அங்கதா! உன் பிரியத்திற்குரிய தந்தையை நான் கொன்றேனென்று நீ என்மீது குற்றங்கண்டு துயருருதே. அவன் எனக்கு விரோதி யல்லவென்பது உண்மையே. அப்படி நேரே விரோதி யாவாரையும் நான் கடிந்து கொள்வதில்லை. ஆனுல் என்னைச் சரண்புகுந்தார் எவரா யிருந்தபோதிலும் அன்னவர்க்கு எவரேனும் கெடுதி நாடினுல் அத்தகையோரை, நான், அவர்களிழைத்த குற்றத்திற்குத் தக்கவாறு சிக்ஷியாமல் விடுவதில்லை. அது ஒரு புறமிருக்கட்டும். எல்லாப் பிராணிகட்கும் இறப்பும் பிறப்பும் சகடக்கால் போல மாறிக்கொண்டே வருவது இயற்கை.

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்று நூல்கள் கூறுகின்றன. ஆத்மஞானத்தை யுள்ளபடி யறிந்தவரே இவ் வற்றைக் கடலை வற்று விக்குஞ் சக்தி வாய்த்தவராவார். உன் பிதாவோ நல்ல ஞானவானு யிருந்தும், விட்டகுறை தொட்ட குறை என்பவற்றின் சம்பந்தமாகத் தவறுக்குட் பட்டான். இப்போது வீரசொர்க்கம் பெற்றுப் பிறப்பிறப்பிற் கிறுதிகண்டான். அவனைக் குறித்து நீ கவலைப்படவேண்டாம்.

இனி, கிஷ்கிந்தைக்கு நீயே அரசன். ஆயினும் அப்பதவியை நீ கைப்பற்றிக் கொள்வதற்கு இன் னுஞ் சிறிதுகாலஞ் செல்லவேண்டும். நீ இளைஞு யிருத்தலால் அப்பெருஞ்சுமையை இப்போதுன் ஞற் றுங்கமுடியாது. யுக்த வயது வரும் பரியந்தம் உனது சிறிய தந்தையாகிய சுக்கிரீவனே அதை ஏற்று வருவான். நீ அவனுடன் பொருந்தி இருந்து, அரசாட்சியின் கூறுபாட்டை நன்குணர்ந்து தேர்ச்சி யடையக் கடவாய்.

மைந்தா! அரசுபுரிவது எளிதான செயலன்று. அது மடியில் அனலை ஏந்தியிருப்பது போல்வதாம். அன்பு, அருள், ஈவு, இரக்கம், வீரம், தீரம் முத லியவை தழைத்திருக்கவேண்டும். குடிகளை வருத் திப் பயன்பெற முயல்வது கொடுங்கோற் றன்மை யாம். குடிகளும் அரசனும் ஒருவர்க்கொருவர் உடலுயிர்போ லிருந்து வரவேண்டும். சாமதான தண்டபேதம் என்னும் சதுர்வகை உபாயத்தால் இணங்காதாரை இணங்கவைத்தல் வேண்டும். வல்

லவரால் அல்லலுற்ருர்க்கும் வறுமையால் இரக்க லுற்ருர்க்கும் காட்சிக் கெளியனுய், கடுஞ்சொலின்றி 'இவனன்ருே நீதி வேந்தன். இவனுடைய பாது காப்பில் பசி, பிணி, பகை முதலியவை அறியோம். என்றும் இன்பமே குடிகொண்டுளது. சூது, வாது, குடி, கூத்தி முதலிய துர்க்குணங்கள் இவனிடத் தில்லை. பரோபகாரம் இவன்கண் தாண்டவமிடு கின்றது. நாங்கள் நிர்ப்பயமாய் வதிந்து வரு கிருேம்'' என்று பிரஜைகள் கொண்டாடவேண்டும். எத்துணை எளியவரிடத்தும் விளையாட்டார்த்தமாக வேனும் பகைக்கிடமான செயலை மேற்கொள்ள லாகாது.

அப்பா அங்கதா! இந்த அதிசயத்தைக் கேள். நான் பாலயனு யிருந்தபோது உண்டை வில் கையிற் பிடித்துக்கொண்டு விளையாடுவதில் உற்சாகம் பூண் டிருந்தேன். ஒரு நாள் எங்கள் வீட்டுப் பணியா ளான கூனியென்பவள் என்னை என் அன்னை அழைத்துவரச் சொன்னதாகக் கூப்பிட வந்தாள். அப்போது நான் விளையாட்டாய் என் கையிலிருந்த வில்லில் ஒரு மண்ணுண்டையை வைத்து அவள் முதுகின் மேல் எறிந்தேன். அதை அந்தக் கூனி தவருகவெண்ணித் தன் மனதிலேயே வைத்திருந்து, தக்க சமயத்தில் கலக மூட்டி, என்னை நாட்டினின் றும் காட்டுக்குத் துரத்திவிட்டாள். இதோ நான் இப்படி அலைகிறேன். ஆகையால் விளையாட்டுக் காரியம் வினையாய் முடியுமென்பதை மனதிற் பதிய வைத்து அவ்விஷயத்தில் நீ விழிப்பாயிருக்க வேண்டும்.

இந்த அரசச்செல்வம் தேவரையும் மயக்கவல்ல தென்றால் பிறரை அது என்னதான் செய்யமாட்டாது. வேண்டியவரென்றும், வேண்டாதவரென்றும் நினைத்து எவ்விஷயத்திலும் நியாய விரோதமாய்ப் பிரவேசிக்கலாகாது. 'சமன் செய்து சீர் தூக்குங் கோல்போ லமைந்து' நடப்பதே உத்தமம். தீயோரைத் தண்டித்துத் தூயோரைக் காப்பது அரசனுக்கு இன்றியமையாத் தொழில். பெரியோரைக் கனம் பண்ணுதல், தெய்வ வழிபாட்டிற் சிரத்தை கொள்ளுதல், அமைச்சரோடு எதையுங் கலந்தாலோசித்துச் செய்தல் ஆகிய இவற்றை ஒரு போதுங் கைவிடக் கூடாது. இவ்வண்ணம் வாழும் அரசனே சகல பாக்கியங்களையும் பெற்றுப் பெருங் கீர்த்தியுடன் விளங்குவான்'' என்று நற்போதனைசெய்து தமது உடைவாளை அவனுக்குக் கொடுத்து, இளவரசுபட்டஞ் சூட்டினர்.

அங்கதனும் "மகா பாக்கியம் - அடியேனுய்ந்தேன்'' என்று அந்தப்பட்டத்தை ஏற்றுக்கொண்டு தன் பந்து வர்க்கத்தாரிடமும் பிரஜைகளிடமும் ஒருமித்த மனமுடையவனாய் எல்லோரும் வாழ்த்தும்படி தன் சிறியதந்தையின் கீழிருந்து அவன் சொற்படி வாழ்ந்துவந்தான்.

## 3-வது அத்தியாயம்.

### அங்கதன் தளகர்த்தனுதல்

கிஷ்கிந்தா புரிக்கு இறைவனுகச் சுக்கிரீவன் மகுடஞ்சூட்டப் பெற்றுன். இவன் இளவரசான அங்கதனேடு மனுநீதிவழாதபடி இராஜரீகம் புரிந்து வந்தான். இவ் வானராக்கிரேசனை இரகுகுலோத்தமரான ஸ்ரீராமபிரான் பரிவுடன் பார்த்து, "மகாராஜரே! நமது சீதாதேவியின் இருப்பிடத்தைக் கண்டறிய வுமது சேனுவெள்ளத்தை நாற்புறமு மனுப்ப, நீர் இக்கார்காலங் கழிந்ததும் நம்மிடம் வரக்கடவீர்'' என்றுக்ஞாபித்துத் தமது உறையுளை யடைந்திருந்தனர்.

கார்காலம், துணைவரைப் பிரிந்து தனித்துள்ளவரைத் துன்பக்கடலில் வீழ்த்துவது இயற்கை. ஸ்ரீராமபிரானும், ஜானகிதேவியின் பிரிவால் மனத்தளர்வெய்தி, ஒருவாறு முகவாட்டத்துடன் வீற்றிருந்தார். அது கண்ட இளையவர் தமது தமயனுரை நோக்கி "அண்ணு! தாங்களென்ன சில நாளாய்ப் பொலிவிழந்த திருமுகத்துடன் விளங்குகின்றீர். 'காலமானது நீண்டு கொண்டே போகின்றதே. கார்காலமும் நெருங்கி வருத்துகின்றதே. மாயையில் வல்ல அரக்கரின் வீரம் மனிதரான நம்மால் மாற்றற்பாலதோ? தேவியை நாம் எப்போது, எப்படி, காணப் போகிறேம். வாலியின்சேனை உதவிசெய்ய இன்னும் வரவில்லையே' என்கிற கவலையில் மூழ்கி யிருப்பதாகத் தெரிகிறது. நல்ல ஞானத்திலும், மேலான கேள்வியிலுந் தேர்ந்த நீ

விர் இவ்வாறு உன்மத்தரைப்போல் மயங்குவது அழகன்று. நீவிர், சுத்தவீர ரென்பதையும், தற்போது தவக்கோலம் பூண்டிருத்தலையும் மறந்தீர் போலும். அண்ணு !

" காதுகொற்ற நினக்க லாமை
பிறர்க் கெவ்வாறு கலக்குமோ
வேதனைக் கிடமாதல் வீரதை
யன்று பேதைமை யாமரோ
போது பிற்பட லுண்டிதோர்பொரு
ளன்றி யின்று புணர்த்தியேல்
யாதுனக்கிய லாத தெந்தை
வருந்த லென்ன வியம்பினன். "

இரவிகுலாதிபரான பெருமாள், இளவலை நோக்கி "தம்பி! இதென்ன இப்படி மேகக் கூட்டங்கள், "ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்துப் பாழியந் தோளுடை பத்மநாபன் கையில் ஆழி போல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து, தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்" வருஷிக்கின்றனவே. இஃதென்போல்வார்க்கு எங்ஙனம் இடையூறு விளைக்காமற்போம்? அதுபற்றிச் சிறிது என்னையும் மறந்தேன். நீ கோபித்துக்கொள்ளாதே. இக்காலங் கழிந்ததும் நமது சுக்கிரீவன் வருவானல்லவா?" என்றார்.

பின்னர், கார்காலமுங் கழிந்தது. சொன்ன தவணைப்படி சூரியன் மகன் வரவில்லை. ஸ்ரீராமபிரான், இலட்சுமணரை யழைத்து "தம்பி! சுக்கிரீவன் நம்மை ஏமாற்றிவிட்டான். நாம் அவனுக்குச் செய்த உபகாரத்தையும் மறந்து விட்டான். உலகத்

தில் மாதுருஹத்தி, பிதுருஹத்தி, குருஹத்தி, பிராம் மணஹத்தி, பசுஹத்தி, சிசுஹத்தி, ஸ்திரீஹத்தி, என்னும் இத்யாதி ஹத்திகளைச் செய்தவர்க்கும் பிராயச்சித்த மூலமாக உஜ்ஜீவன முண்டாகலாம். ஆனால் செய்யாமற் செய்த உதவியைக் கொன்ற வர்க்கு உய்வுண்டோ? இல்லவே இல்லை. நாமென் னவோ அவனை நம்பினோம். அவனும் அப்படி நன்றி மறப்பவனல்ல னென்றே என் புத்தியிற் படுகிறது. என்ன அசந்தர்ப்பமோ? கொஞ்சம் போய்த் தெரி ந்து வருகின்றனையா?" என்றார்.

இலக்குவர் "ஆ! ஹா! தெரிந்து வருவதோடு அவனை ஒருகை பார்த்தும் வருகிறேன். இதோ புறப்பட்டேன்" என்று வீராவேசத்துடன் எழுந் தார். இவரெழுந்த கோலத்தைக் கண்ணுற்ற ஸ்ரீ ரகு நந்தனர், 'என்ன அநர்த்தத்தை இவன் செய்து வரு வானோ' என்று கருதி, "தம்பி! இலக்ஷ்மணா!

"நஞ்ச மன்னவரை நலிந்தாலது
வஞ்சமன்று மனுவழக் காதலால்
அஞ்சி லம்பதி லொன்றறி யாதவன்
நெஞ்சில் நின்று நிலாவ நிறுத்துவாய்"

என்று சாந்தமாகச் சாற்றினார்.

ஸ்ரீராமபிரான் இவ்வா றுரைத்ததில், இலக்ஷ்மணர் குறிப்பாகத் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமும் அடங்கி யிருக்கின்றது. அது இரகு நாயகன் சுக்கிரீவனிடங் கொண்டுள்ள அன்பை வெளிப் படுத்து கின்றது. அவ்விஷயம் இப்பாடலில் மூன் றும் அடியின்கண் பொதிந்துள்ள நயமாம். அதா வது "தம்பி! இலக்ஷ்மணா! சுக்கிரீவன் சூது

வாது அறியாதவன்; நிஷ்கபடி; 'அஞ்சிலம் பதி லொன்றறியாதவன்' அதாவது எழுத்து வாசனை புணராதவன் (* அஞ்சு + அம்பது + ஒன்று = ஐம்பத்தாறு அக்ஷரங்களில் எதுவும் கண்டறியான்; நிரக்ஷரகுக்ஷி; பண்டிதோத்தமனாகிய மாருதியால் நடத்தப்படுபவன்) ஆதலால் அவனை நாம் அதிகமாகக் கோபித்துக் கொள்ளக் கூடாது.

அன்றியும், அவன், தான் மலைப்பிரதேசத்தில் வசித்து வருவதால் நம்மை மனிதரெவரும் ஒன்றுஞ் செய்ய முடியாதென்று நினைத்துக்கொண்டிருக்கலாம். 'அஞ் சிலம்பதில் ஒன்றறியாதவன்'—உலகின்கண் உள்ள மலைகளில் இந்தக் கிஷ்கிந்தையைத் தவிர அவன் வேறெதைக் கண்டவன். ஆகையால் அவ்வுணர்ச்சியிலும் அவன் அனுபவ மற்றவனே. அஸ்திரப் பயிற்சியாவது கொண்டவனா வென்று பார்ப்போமானால் அதுவுமில்லை. 'அஞ் சில் அம்பு அதில் ஒன்று (உ-ம்) அறியாதவன்'. கடைசியாக அவன் 'அஞ்சில் (ஐந்தில்) அறியாதான் அம்பதிலும் (ஐம்பதிலும்) தானறியான்' என்னும் பழமொழிக் குரியவனே என்பதை அவன் நம்மைச் சரணாகதி யடைந்த ஞான்றே காட்டி விட்டான். அவனை வெறும் நயபயத்தால் கண்டித்து நற்புத்தியை அவன் நெஞ்சிற் பதியும்படிச்செய்து, அவனையன்புடன் அவனது தளத்தோடும் அழைத்துக் கொண்டுவா" என்றனர்.

---

* இந்த இடத்தில் அஞ்சு, அம்பது—ஐந்து, ஐம்பதின் போலி.

இலக்ஷ்மணர் இக்கருத்தை இருதயத்திற் கொண்டவராய், வெளிக்குப் பெருஞ்சினங் கொண்டவர்போல் நடித்துக் கிஷ்கிந்தையிற் புகுந்தார். விசுவாமித்திரரைப் போல் இவர் வரும் விநோதத்தைக் கண்ட கிஷ்கிந்தை வாசியரனைவரும் அச்சத்தால் நடுநடுங்கி வாயுகுமாரரிடம் முறையிட, அவர் இதை இளவரசாகிய அங்கதனிடந் தெரிவிக்க, அவன் ஓடிச் சுக்கிரீவனை எச்சரித்தான்.

சுக்கிரீவன் அப்போதுதான் விழித்துக் கொண்டவன்போல் எழுந்து நின்று அங்கதனைக் கட்டிக் கொண்டு "மகனே! என்ன காரியஞ்செய்து விட்டேன் பார்த்தையா? எவரால் நான் இந்தப் பாக்கியத்தைப் பெற்றேனோ அவருக்கு நான் சொன்ன வாக்கை நிறைவேற்ற அடியோடு மறந்தேனே. இப்போது நானும் ஓராண் மகனென்று வெளிவர என் மனங் கூசுகின்றதே. பாழும் மதுவல்லவா என்னை யிந்நிலைக்குக் கொண்டுவந்துவிட்டது. தக்கோரால் வெறுக்கப் படுபவரன்றோ இம்மதுவை விரும்புவர். யானும் அவ்வெறுப்புக்குப் பாத்திரவா னாயினனே; எல்லாப் பிழைகளையும் பொறுத்துக் கொண்டு ஆதரிக்கவல்ல அன்னையும் அல்லவா மதுவருந்தும் இக்கொடிய பிழை ஒன்றைமட்டும் பொறுத்தா தரிக்கத் துணிவு கொள்ளாள். அவ்வாறாயின் என்னை எவ்வாறு அத்தூயோர் ஆதரிக்கப் போகின்றனர். ஐயோ! இவள் தாய், இவள் மனைவி என்றுணருந் தெளிவைப் போக்கி, ஐம்பெரும் பாதகங்களுள் ஒன்றாய் நின்ற தனக்கு உள்ளாக்கிக் கெடுக்க வல்ல இதனை அறிவாளர் நாடுவரா? என் அறி விருந்த வாறுதா னென்னே! பிறவித் துன்பத்திற் காதார

மான அஞ்ஞானமென்னும் மயக்கி லழுந்தினர் அந்த மயக்கின்மேல் இந்த மயக்கைத் தேடிக்கொள்வது என்ன விபரீதம்! இரக்கமற்ற எல்லாக் கொடுமைகளையும் புரியத்தூண்டவல்ல இம்மதுவை அருந்துவதினும் விஷத்தை யுண்பதே நலம். விஷம்கொல்லுமே தவிர நரகத்தைத் தராது. மதுவோ தன்னை யுட்கொண்டவரைச் சீவனிருந்துஞ் செத்தவரைப் போலாக்கி முடிவில் நரகத்தை யன்றோ கொடுத்தற்குரியது" என்று சொல்லி வருந்தினன். பிறகு அங்குள்ள வானரவீரர் அவனைத் தேற்றினர்கள். வாலியின் மனையாளான தாரை, தோழியர் சூழச்சென்று இலக்ஷ்மணரின் திருவடியில் வீழ்ந்து சுக்கிரீவன் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டிக் கொண்டனள்.

அனந்தரம் சுக்கிரீவன் தனது சேனைகளைத் திரட்டி அச்சேனைக்கு அங்கதனைத் தளகர்த்தனாக்கித் தன்னுட னழைத்துக் கொண்டு, அநுமன் சகிதம் ஸ்ரீராமபிரானிடம் வந்து பணிந்தனன். பெருமானும் அத் தானைப் பெருக்கைக் கண்ணுற்று மகிழ்ந்தனர். இலக்ஷ்மணரை நோக்கி "தம்பி? உலகத்தில் அளவு படுத்துவதற்குக் கூடாதவை சிலவுண்டு. அவற்றுள் நமது சுக்கிரீவன் சேனையும் ஒன்றாகத் தோன்றுகின்றது. இப்பெருஞ் சேனையை நான் எங்குங் கண்டதில்லை.

"ஈசன் மேனியை யீரைந்து திசைகளை யீண்டிவ்
ஆசில் சேனையை ஐம்பெரும் பூதத்தை யறிவைப்
பேசும் பேச்சினைச் சமயங்கள் பிணக்குறு பிணக்கை
வாச மாலையாய் யாவரே அளவிட வல்லார்."

என்று கூறினர்.

சேனையானது, அரசனுக்குரிய செல்வங்களுள் தலைமைவாய்ந்தது; ஆண்மை, மானம், முன்னோர் வழியைப் பின்பற்றல் என்பவற்றைத்தனக்கு அணிகலனாகக் கொண்டது; தோற்றப் பொலிவால் மேம்பாடுள்ளது; அரசனுடைய அன்பின் பாதுகாப்பால் ஓங்கிப் பெருகுவது; வாழையடி வாழையாய் அரசனுக்குப் பேருதவியா யிருந்து வெற்றியளிக்க வல்லது; பகைவரை எலித்திரளாகப் பாவித்துத் தான் அரவொத்து நின்று, உயிர்ப்பால் அத்திரளை அழிக்குஞ் சக்தியைப்பெற்றது; கூற்றையும் பின்னடையச் செய்வது; வேந்தன் வெகுண்ட காலத்தும் தனது பராக்கிரமத்திற் சோர்வுறாதது; தன்னைக்காப்பாற்றி வருங் காவலனுக்குத் தன் உயிரைக் கொடுக்கத் துணிந்தது. இத்தன்மைகள் தழைக்கப்பெற்ற சுக்கிரீவனது சேனையின் வல்லமைத் திறத்தை எடுத்துப் பேச ஒருவராலும் முடியாது.

இந்தச் சேனவெள்ளத்திற்கு,

"நிலமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்கள் இல்வழி யில்"

என்கிறபடி, ஒரு தளகர்த்தன் வேண்டுவது அவசியமன்றோ? இப்பதவிக்கு யோக்கிய மானவன் அங்கதனே என்று தேர்ந்தெடுக்கப் பட்டதால் அவனே தளகர்த்தனானன்.

தளகர்த்தனாகிய அங்கதன் தன் சேனையை நான்கு திசைகளுக்கும் பிரித்தனுப்பி வைதேகிப் பிராட்டியின் இருப்பிடத்தைக் கண்டுவரச் சொன்னான். அநுமானைத் தலைமையாகக் கொண்டு, தென்றிசையை நோக்கிச்சென்ற சேனை, மகேந்திரகிரியிற்

றங்கி, அங்குநின்றும் இலங்கைக்குப் போகக் குறுக்கே கடலிருந்தமையால், அதை எவ்வாறு கடந்து செல்வதென்ற யோசனையி லாழ்ந்திருந்தது.

அஞ்சனுதேவியின் அருந்தவப் புதல்வரான ஆஞ்சநேயர், ஸ்ரீ ராமபிரானிடங்கொண்ட பேரன் பால், தாமே அந்தக் கடலைக் கடந்து போவதாகத் துணிந்தனர். இத்துணிகரத்தை மேற்கொண்ட வாயு புத்திரர் தம்முடன் வந்த சேனையை அம்மலையின் கண்ணே யிருத்தி, ஸ்ரீ ராமநாமத்தைத் தியானித்து, கடலைத்தாண்டி இலங்காபுரியையடைந்தார். வழியில் தாம் சந்திக்கநேர்ந்த அனுகூலரை இதவசனங்களா லுபசரித்து, பிரதி கூலரை வானுலகேற்றினுர். சீதா பிராட்டியை அசோகவனத்திற்கண்டார். அவ்வம் மனுக்கு ஸ்ரீராமபிரானுடைய சங்கதிகளைச் சாங்கோ பாங்கமா யெடுத்துரைத்தார். பெருமானுடைய திரு வாழியையும் அவரது திருக்கரத்தில் கொடுத்தார். பிராட்டியார் தந்த சூடாமணியைத் தாம் பெற்றுக் கொண்டார். இலங்காதிபதியான இராவணனுடைய அரும்பெறற் பொழிலை யழித்து, அவனது கிங்கரர், சம்புமாலி, பஞ்சசேனுபதியர், அக்ஷகுமாரனுகிய இவர்களை வதைத்தார். இந்திரஜித்தனை யெதிர்த்தார். பாசத்தாற் கட்டுண்டு நீங்கினுர். இலங்கையை எரித் தார். இராவணனைச்சந்தித்து அவனுடைய அயோக் கியத்தன்மையை இழித்துக்கூறி நிந்தித்தார். பிறகு இலங்கையை விட்டுப் புறப்பட்டு, மகேந்திரகிரியை அடைந்து, அங்குக் காத்துக்கொண்டிருந்த சேனைக் குப் பிராட்டியைக் கண்டசேதியை வெளியிட்டார்.

அதன் பின் அச்சேனையைத் தம்முடன் கூட்

டிக்கொண்டு வந்து தமது இளவரசனும் தளகர்த்தனுமான அங்கதனைக் கண்டு வணங்கி, வைதேகித் தாயாரின் க்ஷேமத்தைச் செப்பினுர். அவருடன் வந்த சேனையாகிய வானரர், இச்சந்தோஷகரமான சேதிக்காகத் தங்களுக்கு, இந்திரனல் வாலிக்கு அளிக்கப்பட்டதும், அதிரமணீயமானதும், வாலிக்குப்பின் சுக்ரீவன் வசமாய் அவனுலவன் உயிரே போல் பாதுகாக்கப்பெற்று வருவதும், தேவர்களாலும் நோக்குதற்கரியதும் ஆகிய மதுவனத்தைக் கொள்ளையிட, உத்தரவளிக்கவேண்டுமென்று மிக்க பணிவுடன் அங்கதனைக் கேட்டுக்கொண்டனர்.

அங்கதன் அவர்கள் விருப்பத்தின்படி செய்ய அனுமதி தந்தனன். வானரர் உடனே அவ்வனத்திற் புகுந்து, தமது இஷ்டப்படி மதுவருந்தி அதனை அழிக்கலுற்றுர்கள். அங்குக் காவல் பூண்டிருந்த வானரர் அவர்களை எதிர்த்துப் போரிட்டனர். இரு திறத்தார்க்கும் பெரும் போர் விளைந்து காவலாளிகள் அடிபட்டுச் சகிக்கொணுத் துன்பத்தை யடைந்தார்கள். சிலர் ஓட்டமாக ஓடித் தங்கள் காவலதிகாரியான ததிமுகனென்னும் வானரவீரனிடம் முறையிட்டனர். அவன் சென்று அவர்களைத்தடுத்த போது அவர்கள் "இவ்வனத்தை எங்கள் மனோரதப்படி கொள்ளையிட இளவரசரான அங்கதப்பிரபு கட்டளையிட் டிருக்கிறுர். நீ அவரிடம் போய் உன் குறையைத் தெரிவித்துக்கொள்" என்றுர்கள்.

ததிமுகன் அந்த க்ஷணமே அங்கதனிடஞ் சென்று, "ஐயா! மதுவனத்தைக் கொள்ளையிட நீர் உமது வானரர்களுக்கு உத்தரவிட்டது உண்மை

தானு? அது உம்முடைய சிறிய தந்தையாரான சுக்கிரீவ மகாராஜருக்கு மிகவும் பிரியமான தொன்றென்று நீர் அறியீரா? அவர் உமது தந்தையையும் வென்றவராயிற்றே. அத்தகைய வல்லமையைப் படைத்த அவருடைய வனத்தை அழிக்க நீர் எப்படி ஆக்யாபிக்கலாம்.

"எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு."

இப்போது என்ன சமாதானஞ் சொல்லப்போகிறீர்? இளங்கன்று பயமறியாதென்கிறபடி சிறிதும் யோசனையின்றி இதிற்றலையிட்ட நீர் இனி எவ்விதம் உமது காலத்தைக் கழிக்கப் போகிறீர். சிறுபிள்ளைச் செயலை யியற்றி எனக்கல்லவா பேராபத்தை விளைத்துவிட்டீர். மகாராஜருக்கு நான் என்னவென்று சொல்லிப் பிழைக்கப் போகிறேன். நீர் கெட்டதுமன்றி என்னையும் கெடுத்தீரே'' என்று பலவாருகப் பேசலுற்றுன்.

இப்பேச்சு, தளகர்த்தனை அங்கதனுக்குக் கோபத்தை மூட்டிவிட்டது. உடனே அவன் ததிமுகனைப்பிடித்து "அடா! ததிமுகா! இவ்வாறு அதனப்பிரசங்கஞ்செய்ய உனக்கதிகாரம் கொடுத்தது யார்? என் உத்தரவால் மதுவனம் அழிக்கப்பட்டதென்று நீ அறிந்தபோது, கேள்விவருங் காலத்தில் இதை வெளியிடலாம் என்று மௌனமாயிருக்கவேண்டும். அப்படி யிருக்க மனமொப்பாவிடின், இவ்விஷயத்தை யுடனே சென்று எனது சிறிய தந்தையிடம் தெரிவித்து, அவர் கட்டளை யிடுகிறபடி நடந்துகொள்ளவேண்டும். அதை விட்டு

விட்டு என்னிடம் வந்தா உன்னுடைய வாய்வல்லமையைக் காட்டுகிறுய். இதோ நான் புரியும் தண்டனையைப்பெற்றுக்கொண்டு நீ செய்ய உத்தேசிப்பதைச் செய்'' என்று சொல்லி, அவன் மூக்கிலும் வாயிலும் குருதிவெள்ளம் பிரவகிக்கும்படி, தன் கைகளால் ஓங்கியடித்து, ''ஓடிப்போ'' என்று விடுத்தனன்.

இரத்தப் பிரவாகத்துடன் ததிமுகன் ஓட்டமும் நடையுமாய்ச் சென்று சுக்கிரீவனிடம் முறையிட்டான். சுக்ரீவன் அவனை நோக்கி ''அடாது செய்தவன் படாது படுவான்'' என்கிறபடி நீயே தேடிக்கொண்ட தீங்கிற்கு நானென்ன செய்வேன். அங்கதன் என்னைச் சார்ந்தவனென்றும், அவனுக்கும் அவ்வனம் உரியதென்றும் நீ யறியாமற் போனதென்ன? என்னிடம் நேரே வந்து என் கருத்தை யுணர்ந்து கொள்ளாமல் நீயேன் அவனிடம் கற்றதெல்லாம் பேசலுற்றுய்.

''சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மை யறிந்து.''

என்றபடி மறந்து உன் வாய்கொழுப்பால் நீ கெட்டதற்கு நான் செய்யத்தக்க பரிகாரம் ஒன்றுமில்லை. அவனையே சரணமடைந்து உன் குற்றத்தைப் பொறுத்தருளும்படி வேண்டிக்கொள்'' என்று புத்திபுகட்டி அனுப்பி விட்டான். நிற்க,

அங்கதன், தென்றிசை போய் வந்த ஆஞ்சநேயர் தெரிவித்த சுபசெய்தியைச் சுக்கிரீவனுக்கு

விண்ணப்பித்து அவனையும் ஸ்ரீ ராமபிரானையும் மகிழ்வித்துத் தன் வேலையைக் கவனித்து வந்தான்.

---

## 4-வது அத்தியாயம்

### அங்கதன் தூதுபோதல்.

கருணாநிதியாகிய ஸ்ரீ ராமபிரான், இராவணனுடன் போர் புரியக்கருதி, எழுபது வெள்ளம் வானரசேனையோடு இலங்காபுரிக் கோட்டையின் வடக்கு வாயிலண்டை வந்து தங்கி, வஞ்சகனாகிய தசக்கிரீவனது வரவை எதிர் பார்த்திருந்தனர். அப்போது அவருக்கோரெண்ணம் உதித்தது. உத்தம குணனும் சகலசாஸ்திர விற்பனனும் ஆகிய விபீஷணாழ்வானைப்பார்த்து, "அன்புடையீர்! நாமென்னவோ யுத்தஞ்செய்வதே சரியென்று அக்கோலத்துடன் இங்கு வந்திருக்கின்றோம். இராவணனோ இன்னும் வரக்காணோம். என்ன கருத்துடன் தாமதித்திருக்கிறானோ தெரியவில்லை. நாம் மறுபடியும் ஒரு தூதுவனை அவன்பா லனுப்பி, சீதையை இப்போதாவது விட்டுவிடுகிறாயோ வென்று கேட்போம். அதற்கவன் உடன் படாமல் மறுத்துரைப்பானாயினால் அவனுடன் நாம்போரிடுவது கடனென்று எனக்குத் தோன்றுகின்றது. தருமநூலும் அவ்வாறுதான் போதிக்கின்றது. அதுவே ஞாயமென்றபிப்பிராயப்படுகிறேன். நீரென்ன சொல்லுகிறீர்?" என்று வினவினர்.

விபீஷணாழ்வான், "பெருமானே! தேவரீர் கருதுவது நிரம்பவும் நேர்மையானதே" என்றனன்.

அருகே நின்றிருந்த சுக்கிரீவன் "ஆம், ஆம். அது தான் நீதிவேந்தர்க்கடுத்தது" என்றான். இவற்றைச் செவியுற்றிருந்த இலக்ஷுமணர் சுக்கிரீவ விபீஷணரைப் பார்த்து, "நல்லவுந் தீயவும் நாடி நாயகற்கு, எல்லையில் மருத்துவன் இயல்பின் எண்"ணிச் சொல்லுவதன்றோ தலைவனை யடுத்து நின்றோர் செய்யத் தக்கது.

" தெரிந்துந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு "

என்று நீதிநூல் கூறுகின்றது. இராவணன்,

" அரும்பாதகன், பொய்யன், காமுகன்,
கள்வன், அருள் சிறிதும்
அரும்பாத கன்னெஞ்சன், ஆறாச்சினத்தன்,
அவாவினின்றும்
திரும்பாத கன்மத்தன் "

என்பதைக் கரதலா மலகம் போற் கண்டறிந்தும், இன்னும் அவன் திறத்திற் கருணை காட்டுவது நன்றாமா? 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்கிறபடி அவன் நூல்கள் கற்கத் தொடங்கிய போதே அவனுக்கு ஒழுங்கீனமான அறிவு விளங்கி வந்ததென்று நாம் கேட்டிருக்கிறோமே.

" பாதமறை வெவ்வரவினுக்குப்
பாலு நெய்யும் புகட்டிடினும்
வாதை செய்யும் வல்விடமே
வளருமா போல் மனு நூலும்
வேதமவை யோராயிரமும்
விளங்குங் கலையுந் தசக்கிரீவன்
ஓதவோதப் போதங் கெட்
டபோதமான தோங்கியதே "

என்று பெரியோர் கூறியுள்ளது அவனுடைய கல்வி யறிவின் பயனை இனிது புலப்படுத்த வில்லையா? ஐயோ! அண்ணு! அத்துஷ்டன்,

"தேசியைச் சிறையில் வைத்தான்
 தேவரை யிடுக்கண் செய்தான்
பூசுரர்க் கலக்கணீந்தான்
 மன்னுயிர் புடைத்துத் தின்ருன்
ஆசையினளவுமெல்லா
 வுலகமுந் தானே யாள்வான்
வாசவன் திருவுங் கொண்டான்
 வழியலா வழிமேற் செல்வான்"

தங்கையின் வார்த்தையைக் கேட்டு, மாமனைப் பொன் மானுக வரச்செய்து, தங்களையும் பிராட்டி யையும் வேறுபடுத்தி, வஞ்சகத்தனமாய்ப் பிராட்டி யைக் கவர்ந்து சென்ருன். அப்போது பிராட்டிக் காகப் பரிந்துவந்த பெரிய வுடையாரான ஜடாயு வேந்தைத் தான் வரத்தாற் பெற்ற வாளின் வன்மை யால் உயிருண்டான். இன்னவனுக்கு, பிராட்டியை விட்டுவிடும் பட்சத்தில் உயிர்ப்பிச்சை யளிப்பதாக எண்ணங் கொள்கிறீர். அப்படியே அவன் விட்டு விடுவானுனல், தங்களைச் சரணடைந்த அவன் தம்பி யாகிய விபீஷணுழ்வானுக்கு "என்னுடை நாம நிற்கு மளவெலாம் இலங்கை மூதூர், மன்னவன் நீயே" யென்று வாயால் சொன்ன சொல் எக் கதி யாவது? அதற்கு முன், வேதியர்க்கும் மகரிஷிகட் கும் "நான் இராவணனைக் கொன்று உங்களுக்கு நலம் புரிவேன்" என்றுரைத்த மொழிதான் யாதாக முடிவது? தங்களுக்கு இயல்பாகவே யுள்ள தரும நோக்கிற்கொண்ட பெருந்தன்மையினுல் தசக்கிரீ

வன்செய்த தீமை யனைத்தையும் மறந்து, 'போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்' என்கிற பழமொழியை அநுசரித்து, கடந்துபோன ஒன்றுக்குக் கைகால்களுண்டாக்கி, படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்பவற்றோடு மணி மயமாய் விளங்கும் இலங்கையை வீணே யேன் பாழாக்கவேண்டுமென்று நினைத்துத் தாங்கள் வாளா விருந்தாலும், முன்பின் பாராமல் போருக்கு ஆயத்தப்படுவதே சிறந்த தருமமென்று எனக்குத் தோன்றுகிறது'' என்றார்.

இவ்வண்ணம் தம்பி மொழிந்ததைக் கேட்டுத் தாசரதி புன் முறுவல் பூத்து "அப்பா! உன் எண்ணப்படிதான் கடைசியாக முடியப் போகிறது. அது நமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தபோதிலும், பெரியோர் விதித்துள்ள தரும சாஸ்திர ஒழுங்கை நாம் நழுவவிடலாமா? என்னதான் பலசாலியராயிருந்தாலும், ஒத்துவாழ முயல்வதே வெற்றியைத் தருவதாகும்; அறத்தை வளர்ப்பதாகும். ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கவேண்டாவா?'' ஆகையால் இன்னும் ஒரு முறை இராவணனுடைய அந்தரங்க நோக்கத்தை யாய்ந்தறிவோம். 'பதறாத காரியம் சிதறாது'' என்று கூறினார்.

அனந்தரம் ஸ்ரீராமபிரான் தம்மைச் சார்ந்தாரனைவரையும் பார்த்து, "அறிவிற் சிறந்த அஞ்சனைச் செல்வர் ஒருமுறை தூது போய் வந்தாயிற்று. மீண்டும் அவரையே அனுப்பினால் அவரைத் தவிர அறிவாளர் வேறெவரும் நம்மிடத் திலர் என்று இலங்கேசன் எண்ணிக் கொள்வான். ஆதலால்

இப்போது வேறொருவரைத்தான் அனுப்பவேண்டும். அவன், நாம்சொல்லும்வார்த்தையை இராவணனுக்குச் சொல்லும் யோக்கியதை யுடையவனாகவும், அதனால் தனக்குக் கெடுதி வருவதாயிருப்பினும் அதற்கஞ்சாது நின்று, தாழ்வான வார்த்தையை வாய் சோர்ந்துஞ் சொல்லாத் திண்ணியனாகவும், தீங்கடையாமற் திரும்பிவரக் கூடியவனாகவும் இருத்தல்வேண்டும். இதற்குரியவன் அங்கதனே என்று நினைக்கிறேன். அவன் வாலியின் மைந்தனல்லவா? 'முன்னே முளைத்த காதைப் பார்க்கினும் பின்னே முளைத்த கொம்பே உறுதி' என்னும் முதுமொழிக்கிலக்காக வந்திருக்கிறான்" என்று சொல்லி அவனை அழைத்து "குழந்தாய் அங்கதா! நீ இப்போதே இராவணனிடஞ் சென்று, நான் சொல்லும் இரண்டு மொழிகளில் எது அவனுக்குப் பிரியமோ அதை யறிந்துகொண்டு வரவேண்டும்" என்றார்.

இவ்வினிய வார்த்தை அங்கதனுக்கு அளவு கடந்த உற்சாகத்தை யுண்டு பண்ணிவிட்டது. ஆடினான், ஓடினான், துதித்தான், குதித்தான். இரகுநாயகனை வணங்கி, "சுவாமி! இரண்டே வார்த்தை என்று மொழிந்தருளினீரே, அவை யாவை? உடனே தெரிவித்தருளவேண்டும். நொடிப்போதில் சென்று அவன் கருத்தை யறிந்து வருகிறேன்" என்றான்.

ஸ்ரீராமபிரான், "அங்கதா! நீ இக்கணமே போய், இராவணனைப் பார்த்து, 'அடா வஞ்சகா! நீ மாய வேடங்கொண்டு கவர்ந்து சென்ற தேவியை விடுகின்றாயா? அல்லது போர்க்களங் குறுகி யுன்

ஆவியை விடுகின்றாயா? இவ்விரண்டில் நீ துணிந்ததெது? வென்று கேள். பின்னும், அடா சண்டாளா! இவ்வஞ்சம் அறத்தின்பாற் பட்டதன்று; வீரருக் கடுத்ததுமன்று; ஆண்மையுமன்று; தீமை புரிந்து மறைந்து வாழ்வது பராக்கிரமத்தைக் காட்டுவ தாகாது;

"விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்."

உண்மையாக ஆண்மகனாயின் வெளியே வா; நேரில் நின்று உன் போர்த்திறத்தை நிரூபி; ஏன் அஞ்சுகிறாய்' என்று இடித்துச் சொல்" என்றார்.

இவ்வசனங்களைச் செவியாரக்கேட்ட அங்கதன், எல்லோரையும் வணங்கி விடை பெற்றுக் கொண்டு, 'தூதுபோக மாருதிக்குப் பின் நீ தான்' என்று தன்னைச் சுட்டி ஸ்ரீராமபிரான் சொன்ன அன்பார்ந்த மொழியை நினைத்து நினைத்து, 'இனி எனக்கு நிகர் ஆர்?" என்று உள்ளம் பூரித்தவனாய், பூமியிற்படிந்து ஆகாயத்திற் கிளம்பும் சிங்கக்குட்டி போலுங் ககன வீதியிற் பாய்ந்து, ஸ்ரீராமபிரானது தனுவினின்றும் புறப்படும் பாணமென, இலங்கையை நோக்கி விரைந்து சென்றான். மூவுலகங் களுக்குங் காவலனான இராவணனது கொலுக் கூடத்தை நாடி இவ்வண்ணம் வரும் அங்கதனை இலங்கை வாசிபரான நிருதர் நிமிர்ந்து பார்த்தனர்; பீதி யுற்றனர்; "அந்தோ! முன் வந்து நமது அழகிய பட்டணத்தை நிர்மூலமாக்கிச் சென்ற கிழக் குரங்கு இப்போது பால்ய ரூபங்கொண்டு மீண்டும் எய்தியது; என்ன தீங்கு விளையப்போகிறதோ?"

என்று பெருங்குரற் பாய்ச்சி அழத்தொடங்கினர். இதற்குக் காரணனான தங்கள் அரசனை நொந்து கொண்டனர். இக்கோலத்துடன் அன்னோர் புடை சூழ அரியாதனத்தில் வீற்றிருக்கும் தசக்கிரீவன் முன், அங்கதன் தோன்றினான்; இராவணனது படாடோபத்தை வியந்து நோக்கினான். "அம்மா! இவனை வெல்லத் தக்கவரும் உண்டோ? இல்லை, இல்லை. நாம் வந்தது வீணே" என்று மனத்தளர்வுற்றான். நெடு மூச்செறிந்தான். பின்னர்த் தெளிவடைந்தவனாய் "என்ன இப்படி நான் அறிவற்றவரைப் போல மயங்கலானேன். மாயை நிறைந்த இடமல்லவா இது. என் பேரறிவையுஞ் சிறிது கலக்கியது போலும். முன் வைத்த காலைப் பின் வைக்கலாமா? இங்கென்ன கல்லுக்குப் பஞ்சமா? கட்டைக்குப் பஞ்சமா? கடல் கடந்துவந்த கௌரவத்தையாவது காப்பாற்றவேண்டாவா? ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு. சே! ஒரு கை பார்ப்போம். கடைசியில் காகுத்தர் கையில் இருக்கவே இருக்கிறது. அதன் பெருமை எனக்குத் தெரியாதா? இவனை ஆட்டிப் புடைத்த எனது அரிய தந்தையை அநாயாசமாகக் கொன்றதல்லவா அது? இவனை மகுடபங்கஞ் செய்தது என் சிறிய தந்தையின் ஆற்றலன்றோ? இனி இவன் அழிந்தவனே. அதிக்கிரமித்த காரியம் சும்மா விடுமா?" என்று பற்பலவெண்ணி, ஊழித்தீயானது ஆலகால விஷத்தோடும் மிருத்துவோடுங் கூடிக் கையுங்காலுங் காட்டிச் சுடர் வீசா நின்ற நவரத்ன மயமான மகுடத்துடன் விளங்குவது போலும், விரிந்த கடல் திரண்டு வந்ததுபோலும் வீற்றிருக்கும் இராவணனை அங்கதன் சமீபித்துநின்றான்.

இவ்வாறு நின்ற அங்கதனை இராவணன் கண்களினின்றும் நெருப்புப் பொறி சிந்த ஏறெடுத்துப் பார்த்து, "சிறிதும் பயமின்றி என் எதிரே வந்து நிற்கும் நீயார்? வந்த காரியமென்ன? இங்குள்ளார் உன்னைக்கொன்று தின்பதன் முன் நானறியக் கூறுவாயாக" என்று அதட்டிக் கேட்டான். பராக்கிரமத்தைக்கொண்ட வாலியின் புதல்வனான அங்கதனுக்கு நகைப் புண்டாகிவிட்டது. குலுங்கக் குலுங்கச் சிரித்தான். பின்னரதை யடக்கிக்கொண்டு "என்னையா யாரென்று கேட்கிறாய்? நல்லது சொல்லுகிறேன் கவனமாகக் கேள்.

"பூதநாயகன், நீர்சூழ்ந்த புவிக்கு
நாயகன், அப்பூமேல்
சீதை நாயகன், வேறுள்ள
தெய்வநாயகன், நீ செப்பும்
வேதநாயகன், மேல்நின்ற விதிக்கு
நாயகன் தான் விட்ட
தூதன்யான்; பணித்த மாற்றஞ்
சொல்லிய வந்தேன் என்றான்."

இதைக்கேட்ட இராவணன் கைகொட்டி நகைத்து, "எனது சன்னிதானத்தில் பெருத்த விவகாரங்கள் நடைபெறுமே யன்றி அற்பவிவகாரங்கள் தலை காட்டா? சிவனோ, அல்லது விஷ்ணுவோ, அல்லது பிரமனோ என்னைப்பற்றி இன்னவிஷயங் கூறினர் என்று ஏவலாளர் எப்போதேனுஞ் சொல்வதுண்டு. இதைத் தவிர வேறு ஒன்றும் இதுவரையில் நடைபெறவில்லை. இப்போது இழிவான குரங்குகளை யெல்லாங் கூட்டிக்கொண்டு, தென் கடலாகிற குட்

டையை அணைகட்டி, இன்னுங் கருணை பிறக்கவில்லையா என்பதை அறிந்து வாருங்களென்று சொல்லி ஒவ்வொருவராக என்னிடம் உங்களை யனுப்பும் அந்த நரப்பயலா உலகங்களுக்கெல்லாம் நாயகன்? வேடிக்கைதான் இது'' என்று மீண்டுந் தனது பத்து வாய்களையும் பரக்கத் திறந்து பற்களைக் காட்டிச் சிரித்தான். பின்னும் அங்கதனைப் பார்த்து அசுராதிபதி, "அடா பயலே! நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வரும் என் பெருமையை யுணர்ந்து நான் சொன்ன அந்த பிரமாதிதேவரும் என் நகரத்திற்குவரப் பயந்து, மறைந்து வாழ்கின்றனர். நல்லது, கேவலம் மனிதர்க்காகப் பரிந்து தூதாகவந்த நீ யார்? உன் வரலாற்றை முன்னஞ் சொல், பார்ப்போம்.'' என்றான்.

"என் வரலாறு தெரியவேண்டும். சொல்கிறேன் கேள். தேவர்களுக் கெல்லாந் தலைவனாகிய இந்திரனது அருந்தவப் புதல்வனும், வேதாதி கலைகளில் சிறந்த ஞானத்தைக் கொண்டவனும், சிவபூசை வழாத நெறியை யுடையவனும், பெறலரும் வரத்தைப் பெற்றவனும், சப்த சாகரங்களையும் கிரிகளையும் ஒரே தாண்டில் கடக்க வல்லவனும், இராவணனென்னும் பெயரிய ஒருவனைத் தன் வாலிற் பிணித்தபடி சஞ்சரிக்கத் தக்கவனும், விண்ணவர் வேண்ட, மந்தரமலையைக் கொண்டு கடலைக் கடைந்தவனும் ஆகிய வாலி என்னும் வானர பூபதியின் மைந்தன் யான்'' என்றான்.

இதனைக்கேட்ட இராவணன், "என்ன—வாலியின் புத்திரனா நீ? என் வயிற்றிற் பாலை வார்த்தாய்.

அடா! அங்கதா! உன்தந்தை எனது ஆருயிர்த் தோழன். அவன் காதலனாகிய நீ ஓரற்ப மனிதனிடம் பணியாளனா யமர்ந்திருத்தல் பெரிதும் நகைப்புக் கிடமானது. இதனினும் இழிந்த பழி யாதிருக்கின்றது. அதிர்ஷ்டானுகூலமாய் நீ என் கண் வரப் பெற்றாய். நீயே வானரேசனா யிருக்கும் பாக்கியத்தை உனக்கு நானே தருகிறேன். இனி நீ சுகப்பட்டாய்'' என்று கூறினான். பின்னும் அவனைப் பார்த்து, அரக்கர்கோன், "நான் புகல்வதை நீ நன்றாய்க் கவனிக்க வேண்டும். அந்த நர மனிதன் மனவிரக்கம் சிறிது மில்லாமலும், நியாய ஒழுங்கிற்கு மாறாகவும் நின்று உன்னுடைய பிரியமான தகப்பனைக் கொன்றவ னல்லவா? அது உன் மனதைப் பிளக்கவில்லையா? அவன் பின் உன்னிரு கரங்களையும் சிரசின்மேற் கூப்பிக்கொண்டு, அவனிட்டவேலைகளை யியற்றிக்கொண்டு திரிவது, வல்ல வீரனது நல்ல குலத்திற் பிறந்த உனக்கு அழகாமா? அது, அடாத தொன்றென்று புலப்படா திருப்பது என்ன பேதைமை. போனது போகட்டும். இப்போது நான் சீதையைப் பெற்றிருப்பதோடு உன்னை யென் சிறுவனுமாகப் பெற்றதே எனக்குப் பேரானந்தத்தைத் தருகின்றது. இனியெனக் கரிதான தொன்று மில்லவே யில்லை. அடா அங்கதா! அந்த நரப்பயல்கள் அற்ப ஆயுளையும் அளவற்ற நோயினையுங் கொண்டவர்கள் தானே. இன்றோ நாளையோ அவர்கள் இறப்பது திண்ணம். உன் அரசை நீ பெற்று நீடூழிகாலம் வாழக்கடவாய். பொன்மயமான சிங்காதனத்தில் வீற்றிருந்து, தேவர்கள் ஏவல்புரிய, ஒரு பேரரசனாய் விளங்க உனக்கு

நானே மகுடம் புனைகிறேன். அஞ்சற்க" என்றான்.

இம்மொழிகளைச் செவி யேற்ற அங்கதன், கைகொட்டிப் பெருநகை செய்து, இராவணனை நோக்கி, "ஐயோ! இவ்விலங்கையி லுள்ளா ரனைவர்க்கும் இறுதிக்காலம் நெருங்கிவிட்டதென் றெண்ணியல்லவா, இப்பதியையும் இதன்கண் வாழ்வோர் நேசத்தையுந் துறந்து, உன் தம்பியாரான விபீஷணர் எங்களிடம் சரண் புகுந்தனர். அப்படி யிருக்க, நீ எனக்கு அரசளிப்பதா யுரைப்பது, ஆலோசிக்கத் தக்கதன்று? அன்றியும் தூதனாகவந்து அரசனாக நிற்பது வினோதத்தினும் வினோதந்தானே. அந்த அரசை நானேற்றுக் கொள்வது, மிருக சண்டாளமான நாயளிக்க, மிருகேந்திரனான சிங்கம் பெற்றுக் கொள்ளும் அரசுக்கு நிகராகுமே யன்றி மற்றென்னும்" என்றான்.

இவ்வாறு அங்கதன் கூற, இராவணனுக்கு இருபது கண்களும் கோபாக்கினியால் கொழுந்து விட்டெரியலாயின. அவன் வாலிகுமாரனைநோக்கி "அடா! சிறு குரங்கே! ஒரே வீச்சில் உன்னை என் கைவாளால் இரண்டு துண்டமாக்கி விடுவேன். அற்ப பிராணியாகிய உன்னிடம் எனது வீரத்தன்மையைக் காட்டுவது கேலிக்கிடமாகு மென்றல்லவோ பின்னிடைகிறேன். நமனுக்கு நாளொப்பிக்க வேண்டிய இழிந்த மனிதருக்குத் தூதுவனாகி, மிக்க துணிகரத்துடன் என்னிடம் வந்தபயலே! வந்த காரியம் என்ன? விரைவிற் றெரிவி" என்றான்.

வாலியின் காதலனாய் நின்ற இளஞ்சிங்கமாகிய அங்கதன், "ஆகா! இதோ தெரிவிக்கிறேன், கேள். எனது நாயகனானவர் என்னை அழைத்து, நீ இலங்கேசன்பாற் சென்று, "அடா! பாதகா! ஒரு பெண்மகளை மாயஞ்செய்து தனியாக்கிக் கவர்ந்து கொண்டு வந்து, இப்பதியின்கண் பதுங்கிவாழும் நீயும் ஓராண்மகனா? இப்போது அத்தேவியை விடுகின்றாயா? அல்லது யுத்தபூமியி லுன் ஆவியை விடுகின்றாயா?" என்று உன்னைக் கேட்டுவரக் கட்டளையிட்டார். பின்னும் உன்னைப் பார்த்து "அடா! துரோகி! உன் பாட்டியான தாடகையின் சரீரத்தைச் சின்னபின்னஞ்செய்து, பருந்துண்ண எறிந்தபோது நீ எங்கிருந்தாய்? என்ன செய்துகொண்டிருந்தாய்? உன் உடன்பிறந்தவளான சூர்ப்பநகையைப் பங்கப் படுத்தியபோது நீ எவ்விடம் போயிருந்தாய்! உன் பிரியத்திற்குரிய தம்பிமாரான கர தூஷண திரிசிர சென்பவரை அன்னோர் படைத்திரளுடன் அதோகதி யாக்கியபோது நீ யுனது ஊரில் இல்லையா? உன் அன்புள்ள மாதுலனான மாரீசனைக் கொன்ற சங்கதி யுனக்குத் தெரியவராதா? இந்தச் சந்தர்ப்பங்களில் ஒன்றுக்காவது பரிந்து வந்து தலைகாட்டாதவனான நீ இனியா வெளிவரும் ஆற்றலைக் கொண்டவனாகப் போகிறாய்?" என்று இடித்துரைக்கச் சொன்னார்.

மற்றும், அஞ்சனைச் செல்வர் சீதா பிராட்டியை அசோகவனத்திற் கண்டு அவ்வனத்தையும், அப்போது எதிர்த்துவந்த அரக்கரையும், உன் அரும் பெறற் புதல்வனான அக்ஷயகுமாரனையும் தென்ன

வன் பதிக்கனுப்பி, உனது ஊரையும் தீக்கிரைசெய்து, கடக்கரும் கடலைக் கடந்து வந்தபோது நீ உறங்கிக் கொண் டிருந்தாயோ? அச்சமயத்தில் வராத நீயா இப்போது போரிட வரப்போகிறாய்? அன்றியும் நீ யுளவறிந்து வரவிட்ட சுக சாரணருக்குவேண்டிய புத்தி புகட்டி உயிர்ப் பிச்சையளித்த போதேனும், கடற்கிறைவனான வருணன் வந்து வணங்கியபோ தேனும், இந்த இலங்காபுரி ராஜ்ஜியத்தை உனது இளவலான விபீஷணருக்கு உரிமையாக்கிய போதே னும், சேது பந்தனஞ் செய்தபோதேனும், சுக்கிரீவ மகாராஜரால் நீ மகுட பங்கமடைந்த போதேனும் மானாபிமானங்கொண்டு நேரேவந்து முகங்காட்டாத வீரனாகிய நீயா இப்போது வீரத்துவம் படைத்து வெளிவரப் போகிறாய்'' என்று வற்புறுத்தி வரச் சொன்னார். முடிவாக நான் மொழிவதைக் கவனி. என் வீணே அழிந்து போக இச்சிக்கிறாய்? பேசா மல் பிராட்டியை விட்டுவிட்டு, உன் சுற்றத்தாருடன் சுகமாய் வாழ்வதைப்பார். இதனினும் உறுதி யுனக்கு வேறொன்றுமில்லை. எங்கள் நாயகருக் கியல் பாயுள்ள காருண்யத்தால் உனக்கு நற்போதத்தைப் புகட்டிவர உத்தரவிட்டார். இதற் கிணங்காவிடில் உடனே எழுந்து என் பின்னாக வந்து உன் பராக்கிர மத்தைக்காட்டு. ஐயோ! பஞ்சபூதங்களும் உன் குற்றேவலுக்குப் பயந்து நடந்து வரும் பெரு மையை நீ சமர்க்களத்தில் இழப்பது சத்தியம் என் பதை வெளிப்படுத்த அவை யுன் பட்டணத்திற்குப் புரிந்த கெடுதியே உணர்த்த வில்லையா? இதைப் பார்க்கிலும் பழி வேறு வேண்டுமா?'' என்று தசக் கிரீவனுடைய மனமானது வருந்தும்படியுரைத்தான்.

இவ் வார்த்தைகளைக் கேட்டதும் இராவணன் அங்கதனை யப்போதே கொல்வது போலும் பெருஞ் சினங்கொண்டு தன் ஏவலாளர் நால்வரை நோக்கி "நீங்கள் இவனைச் சீக்கிரம் பிடியுங்கள், பிடித்துத் தரைமேல் மோதியடியுங்கள்" என்று உத்தரவிட்டான். அவர்களை அங்கதன் தலைவேறு உடல்வேறு படுத்தி ஸ்ரீராமபிரானிடம் வந்து கைகூப்பிநின்றான். பெருமாள் போய்வந்த சேதி என்னவென்றுகேட்க, அங்கதன் "சுவாமி! முழுதுஞ் சொல்லிப் பயனொன்று மில்லை. அந்தக் கொடியவன் தன் தலை போனலொழியத் தான் கொண்ட துர் ஆசையை ஒழிக்கமாட்டான்" என்றான். "அப்படியா!" என்று ஸ்ரீராமபிரான் போரிடத் துணிந்தனர்.

---

## 5-வது அத்தியாயம்.

### அங்கதன் சுகப்பேறடைதல்.

இரகுநாயகர் இராவணனோடு யுத்தம் புரியுங் காலத்தில், அங்கதன் தன்னாலான சகாயத்தைத் தன் மனப்பிரீதியாய்ச் செய்து யாவரையும் மகிழ்வித்தான்; பெற்றார் உற்றார் முதலியவரது சொற்கடவாது நடந்து வந்தான். "இவனைப் போன்ற அறிவறிந்த மைந்தரைப் பெறும் பேறு கொண்டவர்களன்றோ புண்ணிய சீலர்" என்று உலகம் மெச்சும் வழியில் நின்று மேன்மையடைந்து வந்தான். சிவபெருமானுடைய திருவருளின் விசேஷத்தால் புகழோடும் நல்ல ஞானத்தோடும் தோன்றிய இவ்வுத்தமன், ஸ்ரீ ராமபிரானிடம் பேரன்புடைய

வனுயிருந்து, அப்பெருமான், சீதாலக்ஷ்மண பரத சத்ருக்ந சமேதராய், சுமந்திரன் முதலிய அமைச்சரும், வசிஷ்டர் முதலிய பெரியோரும் புடைசூழ, அயோத்தியா புரியில், முடி சூட்டிக்கொண்டு, "இராம ராஜ்யமே ராஜ்யம்" என்று அனைவரும் கொண்டாடும்படி அரசு புரியத்தொடங்கியபோது, அத்தசரததநயரால் அளிக்கப்பெற்ற உடைவாளைக் கையிலேந்திக்கொண்டு வீரதீரத்துடன் அவர் சந்நிதானத்தைக் காத்து வந்தான். இராமநாமத்தை, சர்வதேச சர்வகால சர்வாவஸ்தைகளிலும் மறவாது தியானித்து வந்தான்.

"கற்பார் இராம பிரானையல் லால்மற்றுங் கற்பரோ
புற்பா முதலாப் புல்லெறும் பாதியொன்றின்றியே
நற்பா லயோத்தியில் வாழுஞ் சராசர முற்றவும்
நற்பாலுக் குய்த்தனன் நான்முகனர் பெற்ற நாட்டுளே"

என்கிறபடி முத்திநகரேழிற் சிறந்த திருவயோத்தியின் கண் வசிக்கப்பெற்ற சேதனு சேதனங்கள் முற்றும், ஸ்ரீ ராமபிரான் தம்முடைய திருவடிச் சோதிக்கு எழுந்தருளியபோது, நிரதிசயாநந்த இன்பவீடென்னும் முத்தியுலகை யடையலுற்றன. அங்கதனும் அவ்வாறே அப் பெருநாட்டின்கண் பேரின்பத்தோடும் வாழலானுன்.

இத்திவ்விய சரித்திரத்தைச் சிரத்தை யுடன் படிப்பவரும் கேட்பவரும் இம்மை மறுமைப் பயன்களுக்குரியவராய், மனேபீஷ்டங்கள் கைவரப் பெற்று, தக்க புத்திர பௌத்திர மித்திர பந்துவர்க்கங்களுடன் கூடி, தெய்வபக்தியிற் சிறந்து, புகழை நிலை பெறச் செய்து, நோயின்றிய சுகவாழ்விற்

பொருந்தி வாழ்வார்களென்று தேவர்களும் மகரிஷிகளும் மற்றுமுள்ள பெரியோரும் ஆசீர்வதித்திருக்கின்றனர். நாமும் இதனைக் கவனித்து இன்ப வாழ்விலிருப்போமாக.

இளம் பிராயத்திலேயே அறிவறிந்த மக்களாய் விளங்கப் பெற்றவர், கல்வி கேள்விகளிற் சிறந்து, சுகுணபரணரா யிருந்து, தமது குலத்தை மேம்படச் செய்வதோடு, பொதுநலப் பிரியராய் உலகத்தையுஞ் சந்தோஷப் படுத்துவதற்கு அருகராவர் என்பதை இச்சரித்திரம் நமக்கு எடுத்துரைக்கின்றது. நான்முகத்திற் கூறியுள்ள பயன்களை எளிதிலடைவதற்கு இவ்வுத்தம சரிதையும் ஆதாரமாயிருத்தலின், நாம் இதனை வாசித்து, ஸ்ரீ ராமபிரானது திருவருளுக்குப் பாத்திரராய், இகபர போகங்களைச் சுகமுடன் அனுபவிப்போ மாக.

வாழ்க அங்கதன் மற்றவ னற்கதை
வாழ்க நான்மறை வானவர் மண்ணவர்
வாழ்க வேதியர் மாமழை யான்குலம்
வாழ்க வாங்கில வல்லர சோங்கியே.

அங்கதன் சரித்திரம்
முற்றுப் பெற்றது.

---

"ஆனந்தபோதினி" அச்சுக்கூடம், சென்னை.

## பீஷ்ம விஜயம் — விலை அணா 10.

நமது பூர்வீக சரித்திரங்களுள் இதனைவிடச் சிறந்ததும் நீதிகளைக் கற்பிக்கக்கூடியதுமான உயர்ந்த சரித்திர மெதுவுமே யில்லை யென்று சொல்லலாம். ஸ்ரீ ராமாயணத்தில் பரதனுடைய சரித்திரம் எவ்வளவு சிலாக்கியமானதோ அவ்வளவு சிலாக்கியமான சரித்திரம் இது பாரதத்தில். பாரதம் என்பது ஐந்தாவது வேதமென்பர். அந்த ஐந்தாவது வேதத்தில், இது சிறந்த பாகம். பீஷ்மர், ஒப்புயர்வற்ற வீரர், சத்திய ஸந்தர், பிதுர்பக்தி வாய்ந்தவர், மகா நீதிமான், ராஜதந்திர நிபுணர், கடவுட்பக்தி வாய்ந்தயோகி—இத்தகைய இந்தமகானுடைய குணங்களெல்லாம் இச்சரித்திரத்தில் வெகு அழகாகச் சிறந்த நடையில் விளக்கியுள்ளன.

இதில் பீஷ்மர் தந்தையின்பொருட்டுத் தமக்கு விவாகம் வேண்டாமென்று சபதம் செய்வது படிப்பவர்க்குப் பயங்கரமாகக்கூட விருக்கும். இதனால் ஆங்கிலத்தில இவரை 'Bhishma the Terror' என்று பேசி இருக்கின்றனர்.

## ஸ்ரீ கிருஷ்ணன் தூது — விலை அணா 8.

இந்நூலில் மாணவரும், மற்றோரும் அறியவேண்டிய விஷயங்கள் பல விருக்கின்றன. அவை தருமரது பொறுமையின் பெருமையும் துரியோதனனது பொறாமையின் சிறுமையும், விதுரனது விருந்தின் விழுமமும் கன்னனது நட்பின் உறுதியும் கொடையின் மேன்மையும், குந்தியினது புத்திர வாஞ்சையும், சகோதரர் ஒற்றுமையின் உறுதியும், சான்றோர் மொழி தட்டுவோரது இழிவும் அழிவும், பெரியோரைப் பழிப்பதனாலுண்டாகும் கேடும், தாய் தனையரின் அன்பின் பெருக்கும் இன்னும் பிறவுமாம்.

இதில், கபடநாடக சூத்திரதாரியாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் துரியோதனனிடம் தூதுசென்று விதுரனை வில்லிறுக்கச் செய்த சூழ்ச்சியும், அசுவத்தாமனைத் துரியோதனனினின்றும் பிரித்து மித்திரபேதஞ் செய்த தந்திரமும், இந்திரனைக் கன்னனிடம் ஏவிக் கவசகுண்டலங்களைப் பெறச் செய்த சதுரப்பாடும், குந்திதேவிக்குக் கன்னன் பிறப்புணர்த்தி, அவன்பாற்சென்று அருச்சுனன்மீது அரவக்கணையை ஒரு முறைக்குமேல் இரண்டாவது முறை எய்திற் கணையாகத் தொடுக்காதிருக்க அவளை வரம்பெற்று வருமாறு செய்த சமத்காரமும் அமைந்திருக்கின்றன.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, சென்னை.

18813

# "ஆனந்தபோதினி"

**ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.**

இச்சஞ்சிகை 1915ஹு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-௱-௱-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பிநாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

**ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.**

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் 2-பாகமும் ... | 4 | 0 | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| கற்கோட்டை ... | 2 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | வீரநாதன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸருடைய சரித்திர உபதேசங்கள் | 1 | 12 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| | | | சகோதரவாஞ்சை | 0 | 6 |
| | | | லோகநாயகி அச்சில் | | |

விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras.